“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

## தமிழ்மொழி ஆண்டு 7

**நேரம்: 120 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி – 1

1. **சரியான விடையின் முன் புள்ளடியிடுக.**

1. 'தமிழுக்கும் அமுதென்று பேர்...' என்ற பாடலைப் பாடியவர்

☐ பாரதியார் ☐ பாரதிதாசன் ☐ இடைக்காடர்

2. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

☐ புறநானூறு ☐ மணிமேகலை ☐ நாலடியார்

3. வாய்மொழி இலக்கியங்களுள் இடம்பெறுவது

☐ பரிபாடல் ☐ நாட்டார்பாடல் ☐ சிலப்பதிகாரம்

4. செருப்பறை கேட்டு விருப்புற்று வேலைக் கையில் கொடுத்துப் போருக்கு அனுப்பினாள். இதில் விருப்பு என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ பெருமை ☐ ஆர்வம் ☐ வெறுப்பு

5. எழுத்தாளர் நாவலைப் பக்கம்பக்கமாக எழுதி முடித்தார். இதில் பக்கம்பக்கம் என்பது

☐ இரட்டைக்கிளவி ☐ அடுக்குமொழி ☐ இணைமொழி

6. குதிரை கனைக்கும் அதுபோல புலி

☐ உறுமும் ☐ குரைக்கும் ☐ கத்தும்

7. தமிழர் ஐம்பூதத் தத்துவங்களைப் பார் சிறக்கச் சொன்னார்கள். இதில் பார் என்பது

☐ விண் ☐ வையகம் ☐ ஊர்

8. ஈரடிநூல், தமிழ்மறை, முப்பால் எனச் சிறப்புப்பெயர்கள் பெறும் நூல்

☐ இனியவை நாற்பது ☐ திருக்குறள் ☐ ஆத்திசூடி

9. இடையின மெய்யெழுத்துகளாக அமைவன

☐ க் ச் ட் த் ப் ற் ☐ ங் ஞ் ண் ந் ம் ன் ☐ ய் ர் ல் வ் ழ் ள்

10. கனமழை பெய்ய வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இவ்வாக்கியம்

☐ தனிவாக்கியம் ☐ தொடர்வாக்கியம் ☐ கலப்புவாக்கியம்

11. வடமோடிக் கூத்தாக அமைவது

☐ நொண்டிநாடகம் ☐ இராவணேசன்கூத்து ☐ ஞானசௌந்தரி

12. ஆடித்திரிதல் கண்டால் - உன்னைப்போய் ஆவி தழுவுதடீ! இதில் ஆவி என்பது

☐ நீராவி ☐ உயிர் ☐ உடம்பு

13. மொழிக்கு முதலில் வரும் உயிர் எழுத்துகள்

☐ க ச த ☐ உ ப ந ☐ அ இ உ

14. ஏதேனும் பணிக்காகப் பயிற்சி பெறுவோர் தங்குமிடம்

☐ கழகம் ☐ பாசறை ☐ விடுதி

15. பெண்கள் பலர் கூடிக் கைதட்டி ஆடும் ஆட்டம்

☐ கரகம் ☐ காவடி ☐ கும்மி

16. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை

☐ தேடும் ☐ நாடாது ☐ நாடும்

17. இருதிணை, ஐம்பால், மூவிடங்களையும் உணர்த்தும் வாக்கியம்

☐ வியங்கோள்வாக்கியம் ☐ கூற்றுவாக்கியம் ☐ வினாவாக்கியம்

18. மாணவர்களின் வெற்றியை ஆசிரியர்கள் தம் வெற்றியாகவே கருதி மகிழ்வர். வெற்றி என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ நன்றி ☐ உதவி ☐ தோல்வி

19. மாணவனுக்கு மாணவி போல நாயகனுக்கு

☐ நாயகத்தி ☐ நாயகி ☐ நாயகள்

20. கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன். இதில் கடன்பட்டார் நெஞ்சம் போல என்பது

☐ உவமைத்தொடர் ☐ மரபுத்தொடர் ☐ இணைத்தொடர்

21. என் அம்மாவின் அம்மம்மா எனக்கு

☐ பூட்டி ☐ பாட்டி ☐ ஓட்டி

22. கடலலை மெல்லக் கரையைத் தொட்டுச் சென்றது. இதில் கடலலை பெற்றுவந்த புணர்ச்சி

☐ இயல்பு ☐ தோன்றல் ☐ திரிதல்

23. ஒற்றுமையாய் வாழ்ந்து உயர்வடைவோம். இங்கு ஒற்றுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்

☐ பலம் ☐ உறுதி ☐ வேற்றுமை

24. குழந்தையைத் தூங்க வைக்கப் பாடப்படும் பாடல்

☐ ஊஞ்சற்பாடல் ☐ தாலாட்டுப்பாடல் ☐ ஒப்பாரிப்பாடல்

25. "கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் ...." என்னும் பாடல் இடம்பெற்ற நூல்

☐ புறநானூறு ☐ நாலடியார் ☐ மூதுரை

26. குமணன் தேர்வுக்காகப் பாடங்களை முற்றாகப் படித்து முடித்தான். இதனை விளக்கும் மரபுத்தொடர்

☐ ஒத்துப்பாடுதல் ☐ அறைகூவுதல் ☐ கரைத்துக்குடித்தல்

27. நல்ல நூல்களைத் தேடிக்கற்றல் சிறப்பாகும். இதில் நூல் என்பது

☐ கடிதம் ☐ செய்தித்தாள் ☐ புத்தகம்

28. மாணவர்கள் இன்றைய இடர்காலச் சூழ்நிலையால் சுற்றுலாச் சென்றிலர். இவ்வாக்கியம்

☐ உடன்பாடு ☐ எதிர்மறை ☐ ஏவல்

29. மென்மையான உடையையும் பூவாலான முடியையும் அணிந்து ஆடப்பெறும் கூத்து

☐ வடமோடி ☐ தென்மோடி ☐ வசந்தன்

30. வேந்தன் குடிகளைக் கண்ணை இமைகாப்பது போலக் காத்தான். இதில் வேந்தன் என்பது

☐ அரசன் ☐ பாவலன் ☐ அமைச்சர்

(30×1=30 புள்ளிகள்)

## 2. சேர்த்தெழுதுக.

1. ஏடு + இலக்கியம் = ______________________
2. வடக்கு + கிழக்கு = ______________________
3. மனம் + மகிழ்ச்சி = ______________________
4. ஐந்து + நூறு = ______________________
5. சொல் + சுவை = ______________________
6. மண் + வாசனை = ______________________
7. சான்று + இதழ் = ______________________
8. புறம் + வாழ்வு = ______________________ (8×1=8 புள்ளிகள்)

## 3. பிரித்தெழுதுக.

1. செங்கால் = ______________ + ______________
2. வாட்படை = ______________ + ______________
3. பாதிரிப்பூ = ______________ + ______________
4. தமிழோசை = ______________ + ______________
5. அகவணக்கம் = ______________ + ______________
6. பாற்பல் = ______________ + ______________
7. வீரத்தாய் = ______________ + ______________
8. முச்சங்கம் = ______________ + ______________

(8×1=8 புள்ளிகள்)

## 4. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. தமிழ்ப்பள்ளியின் (விழையாட்டு, விளையாட்டு)ப் போட்டி சிறப்பாக நடைபெற்றது.
2. நான் கடந்த (அரையாண்டு, அறையாண்டு)த் தேர்வில் கூடிய மதிப்பெண் பெற்றேன்.
3. அப்பா இன்று சமையலுக்குப் (பயத்தங்காய், பயற்றங்காய்) வாங்கி வந்தார்.
4. கோயில் (திருவிளா, திருவிழா) வுக்குப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர்.
5. குடிப்பது (கூல், கூழ்) கொப்பளிப்பது பன்னீர்.
6. கடுமையான (காற்று, காத்து) வீசியதால் மரங்கள் முறிந்து விழுந்தன.

(6×1=6 புள்ளிகள்)

**5. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. உணவு பதனிடும் முறைகள் நான்கினை எழுதுக. (1 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

2. வாக்கியத்தின் முதனிலை உறுப்புகளைத் தருக. (1 புள்ளி)

_______________________________________________

3. இன்றைய காலத்தில் சுவிற்சர்லாந்தில் தொழில் பெறுவதற்குப் பெற்றிருக்கவேண்டிய முக்கிய தகுதி யாது? (1½ புள்ளிகள்)

_______________________________________________

4. ஏவல் வாக்கியம் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக. (1 புள்ளி)

_______________________________________________

_______________________________________________

5. யாழ்ப்பாண மன்னர்கள் எந்தச் சின்னத்தை நாணயங்கள், கல்வெட்டுகளில் பயன்படுத்தினர்? (1 புள்ளி)

_______________________________________________

6. கட்டுரை எழுதும் போது கவனிக்க வேண்டிய குறிப்புகள் நான்கு தருக. (1½ புள்ளிகள்)

_______________________________________________

_______________________________________________

**6. திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| கைவிடுவார் | கடைத்தும் | சுடும் |
| மாணார்க்கு | உள்ளம் | அரிது |

1. கெடுங்காலைக் ______________ கேண்மை அடுங்காலை

   உள்ளினும் ______________ ______________.

2. பலநல்ல கற்றக் ______________ மனநல்லார்

   ஆகுதல் ______________ ______________.

(6×1=6 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ண பண்டொரு நாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை அசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே.

அறுபொருள் இவனென்றே அமரர் கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே உலகடைய உண்டனையே
உண்டவாய் களவினான் உறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

______________________________

2. கடலைக் கலக்குவதற்கு மத்தாகப் பயன்பட்டது எது?

______________________________

3. அறுபொருள் இவனென்றே எனத் தொழுதேத்தியவர்கள் யாவர்?

______________________________

4. கடல்வண்ணன் என குறிப்பிடப்பெறுபவர் யார்?

______________________________

5. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. பொருட்பெயர் ____________________

ஆ. சினைப்பெயர் ____________________

இ. இடப்பெயர் ____________________

ஈ. உரிச்சொல் ____________________ (6×1=6 புள்ளிகள்)

**8. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. தொழிற்கல்வி
2. ஓய்வுநேரப் பயன்பாடு
3. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

(9 புள்ளிகள்)

______________________________

______________________________

______________________________

______________________________

## பகுதி – 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1820 ஆம் ஆண்டளவில் தென் இந்தியாவில் இருந்து ஈழத்திற்குக் கொண்டுவரப்பெற்ற தொழிலாளர்கள் மலையகத் தோட்டங்களில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் கோப்பிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்பெற்றனர். இத்தொழிலாளர்கள் நிரந்தரமாக ஈழத்தில் குடியிருக்க எண்ணவில்லை. குறிப்பிட்டளவு செல்வம் சம்பாதித்த பின் தாயகம் திரும்பி சிறுநிலம் வாங்கிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடவே விரும்பினர். இங்கு மட்டுமன்றி பர்மா, மலாய் போன்ற நாடுகளில் குடியேறிய தொழிலாளர்களும் இதே எண்ணம் கொண்டிருந்தனர். ஆனால் ஒரு சிறு தொகையினரது எண்ணமே நிறைவேறியது. பெருந்தொகையானவர்களின் எண்ணம் 'கானல் நீராகவே' மாறியது. பல்வேறு காரணங்களால் இவர்கள் ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்தே ஈழத்தில் நிரத்தரமாக வாழத் தொடங்கினர்.

1. 1820 ஆம் ஆண்டளவில் மலையகத்தில் எப்பயிர் பயிரிடப்பட்டது?

2. ஈழத்தில் குடியேற்றப்பட்ட தொழிலாளர்களின் தாயகம் எது?

3. தென் இந்தியத் தொழிலாளர்கள் வேறு எந்த நாடுகளில் குடியேறினர்?

4. இவர்களின் தாயகம் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறியதா?

_______________________________________________

5. இருபதாம் நூற்றாண்டில் தொழிலாளர்கள் எங்கே நிரந்தரமாக வாழத் தொடங்கினர்?

_______________________________________________

6. ஈழத்திற்குக் கொண்டுவரப்பெற்ற தொழிலாளர்கள் எங்கு குடியேற்றப்பட்டனர்?

_______________________________________________

(6×1=6 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி பந்தியாக எழுதுக.**

1. அது மஞ்சள் நிற ஆறு ஓடுவதுபோன்று அழகாயிருந்தது.
2. அங்கு பறந்து திரிந்த தும்பிகளைப் பிடித்து விளையாடினான்.
3. பெற்றோரும் சிறுவனும் வயல்வெளியூடாகச் சென்றார்கள்.
4. மறைவிடங்களிலிருந்து வெயில் காய வரும் பூச்சி, புழுக்களின் அழகைப் பார்த்து நின்றான்.
5. அங்கே பூத்துக் குலுங்கிய கடுகு வயல் இருந்தது.
6. சிறுவன் அவ்வயலின் இனிய காட்சிகளை நின்றுநின்று பார்த்துச் சென்றான்.
7. அதனால் பெற்றோர் சிறிதுதூரம் முன்னாகவும் சிறுவன் சற்றுப் பின்னாகவும் சென்றனர்.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

(7×1=7புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த மொழியில் வாசித்து தமிழில் மொழிபெயர்த்து எழுதுக.**

Deutsch:

1. Mama hat mir ein neues Buch geschenkt.
2. Die Kinder machen Figuren im Schnee.
3. Tamilische Literatur zu lernen macht Freude.
4. Wir werden in den Ferien in unsere Heimat reisen.
5. Wir müssen die älteren Personen respektieren.
6. Die Sauberkeit macht Freude.
7. In der Schweiz gibt es Weiterbildungsmöglichkeiten.

French:

1. Maman m'a offert un nouveau livre.
2. Les enfants font des bonhommes de neige.
3. Apprendre la littérature tamile donne du plaisir.
4. Nous allons dans notre pays d’origine pour les vacances.
5. Nous devons vivre en respectant les adultes.
6. Une excellente hygiène garantit une bonne santé.
7. Il existe différentes possibilités de formation professionnelle en Suisse.

Italy :

1. Mamma mi ha regalato un nuovo libro.
2. I ragazzini fanno dei pupazzi con la neve.
3. È un piacere imparare la letteratura tamil
4. Noi per le vacanze andiamo in madre patria
5. Dobbiamo vivere rispettando gli adulti.
6. Un’ottima igiene garantisce una buona salute.
7. In Svizzera ci sono varie opportunità per una formazione professionale.

**தமிழ்:**

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

4. ______________________________

5. ______________________________

6. ______________________________

7. ______________________________

(7×1=7புள்ளிகள்)

முதலாம் முறை

இரண்டாம் முறை

இறுதிப்புள்ளிகள்

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |